**விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2024**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறி சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 9 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதி மற்றும் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத:துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள்,

புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக் கூற்றுக்கள்**

**1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,241,656 ஆக சேமிப்புக் கணக்கின் மீதி காட்டப்பட்டிருந்தும் உண்மையில் அவ்வாறான ஒரு மீதி காணப்படாததனால் இப்பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் மிகைக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியம், கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றை ஒன்றிணைக்கும் போது இந்த மீதி புத்தகப் பெறுமதியாக மாத்திரம் நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மீதியை கணக்கேடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உண்மையாகக் காணப்படுகின்ற மீதியை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 939,010 தொகையான ஏனைய பெறவேண்டிய வட்டி மீதி, ரூபா 12,923,393 தொகையான பெறவேண்டிய குறுங்கால கடன் மீதி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது பொறுப்பேற்கப்பட்டிருந்த ரூபா 9,112,579 தொகையான விவசாயக் குழு கடன் மீதி ஆகிய மீதிகளை அறவிடும் இயலுமை நிச்சயமற்றது அல்லது உண்மையாகக் காணப்படாத ஒரு மீதி ஆனதுடன் அவற்றிற்காக ஐயக் கடனுக்கான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. | ஏனைய பெறவேண்டிய வட்டி மீதியான ரூபா 939,010 சம்பந்தமாக கணக்காய்வு வழங்கியுள்ள ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பேன். பெறவேண்டிய குறுங்கால கடன் ரூபா 12,923,393 தொகையான மீதியில் ரூபா 700,218 மீதி மற்றும் ரூபா 7,923,175 தொகையான மீதிகள் சம்பந்தமாக அமைச்சு உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவை சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ரூபா 4,300,000 மீதியானது இரண்டு விவசாயக் கம்பனிகளுக்குரிய மீதிகளானதுடன் அவை தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிச்சயமற்ற மீதிகளுக்காக ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது ஒப்படைத்த ரூபா 697,644 பெறுமதியான விவசாயிகளின் வைப்பு, ரூபா 591,965 பெறுமதியான பங்கு கணக்கு மற்றும் ரூபா 159,399,408 தொகையான கொவிசெத நிதியம் | இந்த மீதிகள் அனைத்தும் 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியம், கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றை ஒன்றிணைக்கும் போது சுழற்சி நிதியத்தின் கிழ் காணப்பட்ட | மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகள் |

| | | |
|---|---|---|
| மற்றும் பெறவேண்டிய வட்டி ரூபா 17,798,678 தொகை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக எந்த சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாததுடன் அந்த மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. மேலும் அதற்காக ஐயக்கடனுக்கான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. | மீதிகளானதுடன் இந்த மீதிகள் ஏட்டுப் பெறுமதியாக மாத்திரம் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு இதற்கான மீதிப்பட்டியல் நிதியத்திடம் இல்லை. | சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் நிச்சமற்ற மீதிகக்காக ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள்,முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் | | | |
| (i) | நி.பி 756(6) | பிரமாணங்களின் பிரகாரம் பொருள் மீளாய்வு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கவில்லை | விவசாய அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த பொருள் மீளாய்வின் மூலம் நிதியத்தின் பொருள் மீளாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அமைச்சின் பொருள் மீளாய்வு அறிக்கையில் நிதியத்தின் பொருள் மீளாய்வு விபரமும் உள்ளடக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும். | பொருள் மீளாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக் கப்படுதல் வேண்டும். |
| (ii) | நி.பி 876(3) | நியதிச்சட்டமற்ற நிதியங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு அவற்றின் நிதி அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் நியதிச்சட்டமற்ற நிதியத்தினை தொடர்ந்தும் பேணுவதற்கு நியாயமான காரணம் இருக்குமாயின் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமாக்கப்பட வேண்டிய போதிலும் இந்த நிதியம் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் அமுல்படுத்தப்படுவதுடன் உரிய அதிகாரச்சட்டத்தின் வரைபு சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நியதிச் சட்ட நிதியம் என்பதாக பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டி 04 இன் 03 ஆம் பிரிவு | வழிகாட்டியின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியில் நிதியத்தின் செயல்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யக்கூடிய வகையில் நிதியத்தின் பிரதான செயற்பாடுகள் தொடர்பாக காலாண்டு ரீதியான அறிக்கை அரசாங்க நிதித் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை உள்ளடக்கிய செயலாற்றல் அறிக்கையினைத் தயாரித்து அரசாங்க நிதித் திணைக்களத்திற்கான மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் பிரதான செயற்பாடுகள் தொடர்பான காலாண்டு அறிக்கையினை நிர்ணயிக்கப்பட்டவாறு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 1994 மார்ச் 09 ஆந் திகதிய விவசாயிக் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதி | | | |
| (i) | 3(1) ஆம் உப பிரிவு | நாட்டு விவசாயிகளின் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் நலன்புரியினை மேம்படுத்துதல், சிறு விவசாயிகளுக்கு குறுங்கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல, சிறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல், பயிர் நிதிச் சிக்கல்களை நீக்குவதற்காக சிறு விவசாயிகளுக்கு வணிகக் கடன் வசதிகளை வழங்குதல், பயிர் மற்றும் கால்நடை உற்பத்திகள் மற்றும் உற்பத்தி நடமுறைகளுக்காக சிறு விவசாயிகளுக்கு உதவியளித்தல் மற்றும் கமத்தொழில் அபிவிருத்திக்கு வசதிகள் வழங்குவதனை முன்னிட:டு விசேட கமத்தொழில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோளாவதுடன் அக் குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை திட்டமிடாது மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி கணக்குகளில் ரூபா 112,947,833 தொகையும் முதலீடுகளில் ரூபா 1,237,584,880 தொகையும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் சட்டம் வழங்கியதன் பின்னர் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் மட்டுப்படுத்தப்பட்டதுடன் வெள்ள இடர் மற்றும் அவசர தேவைகளின் அடிப்படையில் உருவாகிய செயற்திட்டங்களுக்காக மாத்திரம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டன. எனவே அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிதி ஏற்பாட்டினை வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தொடர்ந்தும் பேணுவது சம்பந்தமாக இதுவரை உறுதியான தீர்மானம் இல்லாததனால் புதிய செயற்திட்டங்களுக்காகவும் நிதி யினை விடுவித்தல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே நிதியத்தில் | நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை திட்டமிட்டு நிதியத்தினை பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணப்படுகின்ற மீகை நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ii) | 14 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ஆளணியினரைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை . | இந்த நிதியத்தை தொடர்ந்தும் பேணுவது சம்பந்தமாக உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் சட்டத்தால் உருவாக்கியதன் பின்னர் சேவைத் தேவைப்பாட்டிற்கு இணங்க ஆளணியினரைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையினைத் தயாரித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 58,801,653 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 611,553,841 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 552,752,188 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பொதுத்திறைசேரியிடமிருந்து கொவிசெத லொத்தர் வருமானம் கிடைக்காமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2002 இலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை 09 சந்தர்ப்பங்களின் போது தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு ரூபா 102,689,700 மொத்த தொகையான கடன் வழங்கப்பட்டு அதில் ரூபா 9,000,000 இனை ஒரு ஆண்டின் போது மீண்டும் நிதியத்திற்கு தீர்த்துவைப்பதற்கும் ரூபா 93,662,700 தொகையினை கண்டியில் அமைந்துள்ள மஹபேரியதென்ன தோட்டம் எனும் பெயருள்ள காணியை விற்பனை செய்த உடன் தீர்த்துவைப்பதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிக்கொள்ளப்பட்டது. எனினும் இணங்கிக்கொண்ட சந்தர்ப்பத்தின் போதும் வெளித்தரப்பினர்களுக்கு இக்காணி 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதுடன் இன்றுவரை கடன் வழங்கி 21 ஆண்டுகள் கடந்திருந்தும் தீர்த்துவைக்கப்படாத கடன் மீதி ரூபா 43,512,700 மற்றும் அதற்காக செலுத்த | தேசிய கால்நடை அபிவிருத்திச சபைக்கு வழங்கப்பட்டுள்ள இக்கடன் தொடர்பாக இன்றுவரை மாதாந்த தவணைப் பணம் ரூபா 500,000 வீதம் அறவிடப்படுகின்றது. 2023 சனவரி 17 ஆந் திகதி நடைபெற்ற விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க இன்னும் அறவிட வேண்டிய கடனை முழுமையாகச் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு ஒரே தடவையில் கடன் மீதியினை செலுத்தி முடிவுறுத்துவதற்கு நிறுவனத்திடம் நிதி இயலுமை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | தீர்த்துவைக்கப்படாத கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய வட்டி ரூபா 98,023,448 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது 24 மாதங்களுக்குள் அறவீடு செய்வதற்கு இணங்கி கொண்ட ரூபா 1,000,000 பணம் நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அவற்றில் ரூபா 500,000 பணம் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கைக்காக நுவரெலியா வலப்பனை கிராமத்தின் ஒரு விவசாயிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அப்பிரதேசத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்படவில்லை என அறிக்கையிடப்பட்டதன் காரணமாக மிகுதிப் பணம் விடுவிக்கப்படாததுடன் 08 ஆண்டுகள் கடந்திருந்தும் கடனும் வட்டியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் வட்டியை அறவீடு செசய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கிறேன். | கடனையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு வழங்கியிருந்த ரூபா 200,000,000 கடனுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,900,791 வட்டி இன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் மீதி சம்பந்தமாக கமத்தொழில் நியாய சபை மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. | கடனையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்காக வழங்கிய ரூபா 1,009,457 கடன் பணத்தின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக அக்கடன் வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பான விடயம் நிதியத்திடம் இல்லை. | இம்மீதியானது வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கியுள்ள மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான இன்னும் அறவிட வேண்டிய மீதியானதுடன் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தி இம்மீதியை தீர்த்துவைப்பதற்கு குறித்துக் கொள்கிறேன். | கடனைப் பெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று உரிய கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 3000 ஏக்கர் வயல் காணிகளை Global Gap சான்றுபடுத்தும் நடைமுறைக்கு இணங்க 2018/2019 இல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், சர்வதேச நியம நடைமுறை தொடர்பாக விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துதல் மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமான நிலைபேறான விவசாய நடைமுறைகளைப பின்பற்றுவதன் மூலம் பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் | கடனை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தோற்றுவிக்கப்பட்ட பொற்கொல்லர் தொழில் முயற்சி பொதுக் கம்பனிக்கு ஒரு ஆண்டு காலத்தில் செலுத்தும் அடிப்படையில் ரூபா 5,966,000 வட்டியில்லாத கடன் வழங்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்ட காலப்பகுதியின் பிரகாரம் 2019 மார்ச் மாதமளவில் பொற்கொல்லர்களின் நெல் உற்பத்திக்காக GAP (Good Agriculture Practice) சான்றிதழினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் இன்றுவரை உரிய சான்றிதழினை வழங்குவதற்கு அல்லது வழங்கிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ‘‘பிரயிம் ஹேர்ப் லங்கா’’ எனும் பெயரிலான ஒரு தனியார் கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டின் போது வழங்கியுள்ள ரூபா 3,500,000 கடனில் ரூபா 860,000 தொகை மற்றும் நிலுவையான வட்டி ரூபா 886,666 தொகை இன்னும் அறவிட வேண்டி இருந்தது. | சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு தேவையான மேலதிக நடவடிககைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெரிய வெங்காயம் உற்பத்தி செய்கின்ற 63 விவசாயிகளுக்கு 2016 ஆம் ஆண்டு வரை வழங்கிய ரூபா 11,370,000 கடனில் இன்றுவரை அறவிடப்படாத ரூபா 1,538,064 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் பகுதி பகுதியாக அறவிடப்பட்டுகின்றது. கடனை திருப்பிச் செலுத்தா 09 கடன்பட்டோர்களில் 08 நபர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய கடன்பட்டோர் மரணமடைந்துள்ளார். அப்பணத்தை அவரின் மனைவியிடமிருந்து அறவீடு செய்வதற்கு கமத்தொழில் நியாய சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இணங்கிக்கொண்ட வாறு கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஒரு ஆண்டிற்குள் அறவீடு செய்யும் நிபந்தனையின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் 10,000 விவசாயிகளுக்கு வழங்குவதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 90,000,000 தொகை 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் இன்று வரை 09 ஆண்டுகள் கடந்திருந்தும் ரூபா 10,944,488 மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் பகுதி பகுதியாக அறவிடப்பட்டுகின்றது. கடன் மீதி தொடர்பாக 844 விவசாயிகள் கமத்தொழில் நியாய சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1999 ஆம் ஆண்டின் போது விதை வெங்காய உற்பத்திக்காக ஊவா கமநல சேவை ஆணையாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 2,322,375 தொகையான குறுங்கால கடனில் | இது 2002 ஆம் ஆண்டின் போது கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை விவசாயிகள் நம்பிக்கைப் | இணங்கிக் கொண்டவாறு அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,376,878 தொகையினை இன்றுவரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | பொறுப்பு நிதியத்துடன் ஒன்றிணைக்கும் போது ஒப்படைக்கப்பட்ட மீதியாகும். இது சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் போது ரூபா 22,250 பணம் அறவிடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் போது சோளப் பயிற்ச்செய்கை கடனாக மற்றும் தரிசு வயல்களை பயிர்ச் செய்கை பண்ணுவதற்காக ரூபா 225 மில்லியன் கமநல அபிவிருத்தி திணைக்கத்திற்கு வழங்கப்பட்டுன்னதுடன் அறவிட வேண்டிய கால எல்லையினை மிகைத்திருந்தும் அவற்றில் ரூபா 10,793,661 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் பகுதி பகுதியாக அறவிடப்படுகின்றது. கமநல அபிவிருத்தி திணைக்கத்தினால் இக்கடனை அறவீடு செய்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இணங்கி கொண்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2014/2015 ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்ட செயலாளருக்கு மரபுரீதியாக நெல்லை கொள்வனவு செய்வதற்கு வழங்கிய ரூபா 90,000,000 பணத்தில் ரூபா 2,106,828 பெறுமதி இன்னும் அறவிடப்படாது காணப்பட்டது. | இம்மீதி சம்பந்தமாக குழு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இணங்கிக் கொண்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு நெல்லை அரிசியாக்குதல், சிறிய நீர்ப்பாசனத்தை புனரமைத்தல், தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளல், பூசனிக்காய் கொள்வனவு செய்தல், விதை நெல்லை பெற்றுக்கொள்ளல் ஆகிய செயற்பாடுகளுக்காக வழங்கிய ரூபா 19,061,740 முற்பணம் 03 ஆண்டுகளுக்கும் 24 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி திணைக்கத்திற்கு வழங்கி தீர்த்துவைக்கப்படாத ரூபா 19,061,740 மீதியினை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இணங்கிக் கொண்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | திடீர் வெள்ள நிலையின் அடிப்படையில் இடம்பெற்றுள்ள இடர்களுக்காக நிவாரணம் வழங்கும் குறிக்கோளில் ஈரியகஹமுல்ல அணைக்கட்டை புனரமைத்தல் மற்றும் நாரம்மல மத்திய கால்வாயை புனரமைத்தல் என்பவற்றிற்காக 2024 யூன் 12 ஆந் திகதி ரூபா ரூபா 891,000 பணம் கமநல அபிவிருத்தி ஆணையார் நாயகத்திற்கு வழங்கியிருந்தும் உரிய செயற்பாடுகளுக்காக மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ள பணம் போதியதல்ல எனத் தெரிவித்து 2025 மார்ச் 04 ஆந் திகதி மீண்டும் நிதியத்திடம் வழங்கப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டங்கள் அமுல்ப்படாமையின் காரணமாக பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க மீண்டும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு இப்பணத்தை அனுப்புமாறு கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய பணம் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அங்கீகரித்த செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளினை அமுல்ப்படுத்துவதற்கு பணத்தைப் பயன்படுத்தாது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணம் தொடர்ச்சியாக நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலையான வைப்புக்களில் ரூபா 1,140,000,000 தொகையும் திறைசேரி உண்டியல்களில் ரூபா 97,584,880 தொகையும் அவ்வாறு முதலீடு செய்யப்பட்டு ரூபா 111,384,101 வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சட்டம் வழங்கப்பட்டதன் பின்னர் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவசர செயற்திட்டங்களுக்காக மாத்திரம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது. நிதியத்தினை தொடர்ச்சியாக பேணுவது சம்பந்தமாக இதுவரை உறுதியான தீர்மானம் இல்லாததனால் புதிய செயற்திட்டங்களுக்காக பணத்தை விடுவித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனவே நிதியத்தில் காணப்படுகின்ற மிகைப் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதியத்தின் குறிக்கொள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் கடன் வழங்குதல் நடைமுறை தொடர்பாக உடன்படிக்கைகளை தயாரிக்கும் போது அதில் உள்ளடக்க வேண்டிய அனைத்து நிபந்தனைகள், வட்டியை அறவீடு செய்யும் நடைமுறை ஆகிய விடயங்களை உறுதியாக நிர்ணயித்து உள்ளடக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கடன் பணத்தை வழங்கும் போது கடன் வழங்கிய திகதியிலிருந்து அதனை மீளச் செலுத்துதல் ஆரம்பிக்கும் திகதி வரையான காலம் தொடர்பாக வட்டியை அறவீடு செய்தல் அல்லது அறவீடு செய்யாமை சம்பந்தமான பிரிவு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருககவில்லை. மேலும் கடனை திருப்பிச் செலுத்தாமையின் அடிப்படையில் தண்டனை வட்டியை அறவிட வேண்டும் என கடனை திருப்பிச் செலுத்தாமையின் அடிப்படையில் தண்டனை வட்டியை அறவிட வேண்டும் என கடன் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தும் அந்த அறவீடுகள் மூலதனப் பெறுமதிக்கு மாத்திரமா, முழுமையான வட்டி மற்றும் மூலதனப் பெறுமதிக்கா என்பது தெளிவாக உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிர்ணயிக்கப்பட்டவாறு கடன் பணத்தையும் வட்டியையும் செலுத்தாமையின் காரணமாக தண்டனை வட்டி அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் 03(இ) பிரிவின் பிரகாரம் கடனை மீளச் செலுத்துதல் 2023-10-01 ஆந் திகதியிலிருந்து 2024-01-31 ஆந் திகதி வரையுமாகும். எனவே 2024-01-31 ஆந் திகதிக்கு முன்னர் முழுக் கடன் பணமும் வட்டியும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தீர்த்துவைக்கப்பட்டுள்ளதனால் தண்டனை வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மிகுதிக் கடனை விடுவிக்கும் போது இது சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தி அதில் உள்ளடக்கப்பட வேண்டிய நிபந்தனைகளை உறுதியாகக் காட்டுவதற்கு குறித்துக்கொள்கிறேன். | கடனை மீள அறவீடு செய்வதற்குரிய நிபந்தகைள் உறுதியாக உடன்படிக்கைகளில் காட்டப்படுதல் வேண்டும். |